உலகின் கண் உள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுத்தன்மை மற்றும் தனித்தன்மை உண்டு. எழுத்துக்கள், எழுத்துக்களின் பிறப்பு, பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பால், மூவிடங்கள், பாடல்களின் அமைப்பு அணிகள் ஆகிய இவை எல்லாம் பொதுவானவை.

மொழியின் சிறப்பினால், தொன்மையினால், இடத்தினால், ஒவ்வொரு மொழிக்கும் சில தனித்தன்மைகள் உண்டு. தமிழ் மொழிக்கும் இத்தணி தன்மை உண்டு. எவற்றால் தமிழ் மொழிக்கு தனித்தன்மை உயர் தனி செம்மை உண்டு, என்பதை காண்போம்.

மொழி வேறுபடுவதை போன்று மொழியின் அமைப்பும் வேறுபடும். ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு அமைப்பை கொண்டதாக இருக்கும் உலகத்தில் உள்ள வளர்ச்சி பெற்ற இலக்கிய, இலக்கணங்கள் உள்ள மொழிகளை எல்லாம் மூன்று வித அமைப்புகளில் அடக்குகின்றனர்.

அவை; **1.** தனிநிலை **2.** ஒட்டு நிலை , 3. உட்பிணைப்பு நிலை என்பனவாகும்.

**தனிநிலை**

தனிநிலை என்றால் சொற்கள் எல்லாம் தனித்தே நிற்கும். பகுதிகளே தனித்த சொற்களாக இருக்கும் அதை வேர்ச்சொற்கள் என்றும் கூறுவர்.

ஒரு சொல்லின் அதிகபட்ச சுருங்கிய பகுதி இதுவாகும். இனிமேல் சுருங்குவதற்கு வழி இல்லை என்ற அளவில் அது நிற்கும், இவையே தனி நிலையாகும்.

**சான்று:**

வா, போ, நட, உண், படி போன்றவை பிற உறுப்புகளின் துணை இல்லாமல் தனித்து நிற்பதால் தனிநிலை என்று பெயர்.

**ஒட்டு நிலை ;** ஒட்டுநிலை என்பது தனிநிலைச் சொற்களோடு வேறு வேறு உறுப்புகள் சேர்ந்து சொற்களாக அமைவது.

இந்தச் சொற்களை வேண்டும் பொழுது பிரித்துக் கொள்ளலாம், மறுபடியும் சேர்த்துக் கொள்ளலாம். பிரித்தாலும், சேர்த்தாலும் பொருள் மாறாது.

**சான்று:**

அறி + த் + த் + ஆன் - அறிந்தான்

பகுதி சந்தி இடைநிலை விகுதி

இரண்டாவதாக உள்ள சந்ததியாக த், ந் ஆகத் திரிந்து அறிந்தான் என வினைமுற்று ஆயிற்று.

அறி + ஞ் + அன் = அறிஞன்

பகுதி இடைநிலை விகுதி

அறிஞன் என பெயர்சொல்லாயிற்று.

**அறி** என்ற தனிநிலை சொல்லோடு கால இடைநிலையை சேர்த்தால் வினைச் சொல்லாகவும், பெயரிடை நிலையை சேர்த்தால் பெயர் சொல்லாகவும், மாறும்.தமிழ் மொழி ஒரு ஒட்டுநிலை மொழியாகும்.

**உட்பிணைப்பு நிலை:** ஒரு சொல்லோடு இன்னொரு சொல் சேர்ந்து பகுதி, விகுதி என்று பிரிக்க முடியாது. பிணைந்து பிரிதோறும் சொல்லாக மாறுவது.

**சான்று:**

- சோழன் + நாடு = சோணாடு



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

www.tnpscgroup4.in

- கோவன் + புத்தூர் = கோவை (கோயம்புத்தூர்)
- கொண்டு + வா = கொணா

இந்த மூன்று நிலை மொழிகளுள், தமிழ் ஒட்டுநிலையை சார்ந்தது.மூன்று நிலை சொற்களும் தமிழில் இருந்த போதிலும் ஒட்டுநிலைச் சொற்களே அதிகமாக இருக்கின்றன. ஒரு மொழி ஒட்டுநிலையாக இருந்தால் அம்மொழியை எளிதில் கற்றுக் கொள்ளலாம். தமிழ் எளிமையாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

**உயர்திணை அஃறிணை:**

**உயர்திணை என் மனார் மக்கட் சுட்டே**
**அஃறினை எண்மனார் அவரல பிறவே.**

மக்கள் என சுட்டப்படுவோர் உயர்திணை. அவறல்லாத பிற அஃறிணை என்று இந்நூற்பா கூறுகிறது.

உயர்ந்தக் குலமும், சிறந்த ஒழுக்கமும், பகுத்தறிவும் படைத்த இன பொருட்களை உயர்திணை எனக் கூறினர். இவை அல்லாத உயிருள்ள பொருட்களையும், உயிர் இல்லா பொருட்களையும், அஃறிணை எனக் கூறினர்.

இப்ப பாகுபாடு பிற திராவிட மொழிகளிலும், வடமொழியிலும் இல்லை. மற்றும் பிற உலக மொழிகளிலும் காணப்படுவது இல்லை. தமிழ் மொழியில் மட்டுமே காணப்படுகிறது.

**பால்**

இரு திணைகளிலும் அடங்கிய உலகத்து பொருட்களை ஐம்பால்களாக பிரிக்கின்றன. பால் என்பதற்கு பகுப்பு என பொருள் உண்டு. இப்பால் ஐந்து வகைப்படும்.

அவை :

1. ஆண் பால்,
2. பெண்பால்,
3. பலர்பால்,
4. ஒன்றன்பால்
5. பலவின்பால்

என்பனவாகும். ஆண்பால், பெண்பால், பலர்பால், இம்மூன்றும் உயர்திணைக்கு உரியன. மற்றவை அஃறிணைக்கு உரியனவாகும்.

தமிழில் வருகின்றேன், வருகின்றாய், வருகின்றான், வருகின்றது, வருகின்றன என சொற்களில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களையும் ஆண்பால் ,பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், ஆகிய பால்களையும் ஒருமை பன்மை என்னையும் காண முடியும். இந்த சொற்களுக்கு முன்னால் நான், நீ, அவன், அது, அவை என்ற சொற்களை இட வேண்டியது இல்லை.

| | | | |
|---|---|---|---|
| நான் | வருகின்றேன் | நீ | வருகின்றாய் |
| (அவன்) | வருகின்றான் | அது | வருகின்றது |
| (அவை) | வருகின்றன | | |

வினைமுற்று சொல்லில் உள்ள விகுதியைக் கொண்டு இவை எல்லாவற்றையும் காண முடியும்.

வடமொழியாக சமஸ்கிருதத்தில் பவதி என்னும் வினைமுற்று இருக்கின்றான், இருக்கின்றாள், இருக்கின்றது என பொருள்படும். தமிழில் உள்ளதை போல் பவதி என்னும் சொல்லின் ஈற்றைக் கொண்டு பாலை காண முடியாது. ஆனால் படர்க்கை ஒருமையை குறிக்கும்.

| | |
|---|---|
| ஸ பவதி | அவன் இருக்கின்றான் |
| ஸா பவதி | அவள் இருக்கின்றாள் |
| தத் பவதி | அது இருக்கின்றது. |

ஆங்கிலத்திலும் இப்படியே வருகின்றான், வருகின்றாள், வருகின்றது, என்னும் வினைமுற்றுக்களுக்கு come என்ற ஒரு சொல்,

- He comes,
- She comes,
- It comes,

என பெயர்ச்சொல்லை சேர்த்தால் தான் பாலைக் குறிக்கும். comes, என்ற சொல்லில் தமிழில் உள்ளதை போல் பால் இல்லை. மலையாளத்திலும் வருண்னு என்ற வினை தான் உண்டு. இதில் எண், இடம், பால் ஆகியவற்றை காண முடியாது.

அவன் வருனு, அவள் வருன்னு, அது வருனு போன்று பெயர்ச்சொல்லை சேர்த்தால் தான் பாலை காண முடியும். ஆனால் தமிழில் விகுதியை கொண்டு நாம் பால் எண், திணை, இடம், காலம் இவற்றை அறிந்து கொள்ள முடியும்.

| விகுதி | பால் | எண் | திணை | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| வருகின்றான் | ஆண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வருகின்றாள் | பெண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வருகின்றது | | ஒருமை | அஃறிணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வந்தான் | ஆண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வந்தாள் | பெண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வந்தது | | ஒருமை | அஃறிணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வருகின்றார்கள் | | பன்மை | உயர்திணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வந்தார்கள் | | பன்மை | உயர்திணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வருவார்கள் | | பன்மை | உயர்திணை | படர்க்கை | எதிர்காலம் |
| வந்தேன் | | ஒருமை | உயர்திணை | தன்மை | இறந்தகாலம் |
| வருவோம் | | பன்மை | உயர்திணை | தன்மை | எதிர்காலம் |
| வருகின்றாய் | | ஒருமை | உயர்திணை | முன்னிலை | நிகழ்காலம் |

தமிழ் இலக்கணம் ஐந்து வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது அவை


1.எழுத்து 2. சொல் 3. பொருள் 4. யாப்பு 5. அணி என்பனவாகும்.

| இலக்கண நூல் | ஆசிரியர் |
|---|---|
| அகத்தியம் | அகத்தியர் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| இறையனார் களவியல் | இறையனார் |
| புறப்பொருள் வெண்பாமாலை | ஐயனாரிதனார் |
| அவிநயம் | அவிநாயனார் |
| காக்கைபாடினியம் | காக்கைபாடினியார் |
| நத்தத்தம் | நத்தத்தனார் |
| பல்காயம் | பல்காயனார் |
| பன்னிருபடலம் | அகத்தியரின் 12 மாணக்கர்கள் எழுதிய நூல் தொகுப்பு |
| மயேச்சுவரம் | மயேச்சுரர் |
| யாப்பருங்கலம் | அமிர்தசாகரர் |
| யாப்பருங்கல காரிகை | அமிர்தசாகரர் |
| வீரசோழியம் | புத்தமித்திரர் |
| நேமிநாதம் (சின்னூல்) | குணவீர பண்டிதர் |
| வெண்பாப்பாட்டியல் | குணவீர பண்டிதர் |
| தண்டியலங்காரம் | தண்டி |
| நம்பி அகப்பொருள் | நாற்கவிராச நம்பி |
| நன்னூல் | பவணந்தி முனிவர் |
| இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் |
| இலக்கண விளக்கச் சூறாவளி | சிவஞான முனிவர் |
| இலக்கணக் கொத்து | சுவாமிநாத தேசிகர் |
| தொன்னூல் விளக்கம் | வீரமாமுனிவர் |

## எழுத்து இலக்கணம்

எழுதப்படுகின்ற காரணத்தினால் இவை எழுத்தாகும். (சித்தரிக்கப்படுவது - சித்திரம்; கட்டப்படுவது – கட்டடம்) போன்று எழுத்தானது இரண்டு வகைப்படும். அவை:

1. முதல் எழுத்து
2. சார்பெழுத்து




### முதல் எழுத்து

மொழிக்கு முதற் காரணமாகவும் பிற எழுத்துக்கள் தோன்றவும் இயங்கவும் காரணமாக இருக்கும் எழுத்துக்கள் முதல் எழுத்துக்கள் ஆகும்.உயிர் எழுத்துக்கள் 12–ம் மற்றும் மெய் எழுத்துக்கள் 18-ம் சேர்ந்து முதல் எழுத்துக்கள் 30 ஆகும்.


### உயிர் எழுத்து

பிற ஒலிகளின் துணை இல்லாமல் தானே இயங்கவல்லது. மற்ற மெய்யொலிகளுடன் சேர்ந்து அவற்றை இயக்க வல்லது. நம்முடைய உயிரைப் போன்று தானே இயங்கவும், இயக்கவும் செயல்படுகின்ற காரணத்தினால் இதற்கு உயிர் எழுத்து என்று பெயர்.

இவை பன்னிரண்டு எழுத்துக்களாகும் அவை;

**அ , ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ,**

**என்பனவாகும்.**




### சுட்டெழுத்து

ஒன்றனை சுட்டிக்காட்ட வரும் எழுத்திற்கு சுட்டெழுத்து என்று பெயர். மொழிக்கு முதலிலே நின்று ஒரு பொருளை சுட்டிக்காட்டுவதற்கு வரும். அவை அ, இ, உ என்பனவாம்.

இவை தனியாக வந்தால் சுட்டெழுத்து என்றும், சொல்லோடு இணைந்து வந்தால் அவற்றை சுட்டுப் பெயர் என்றும் கூறுவர்.

**சான்று:** அ, இ, உ - சுட்டெழுத்துக்கள்

அவன், இவன், உவன் - சுட்டுப் பெயர்கள்

அவள், இவள், உவள் - சுட்டுப் பெயர்கள்

இச்சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இரண்டு வகைப்படும்.

### அகச்சுட்டு ;

சொற்களின் உள்ளேயே சுட்டெழுத்து அடங்கி வரும், எனின் அவற்றிற்கு அகச்சுட்டு என்று பெயர். இவை சுட்டுப் பெயரும் ஆகும்.

**சான்று:** அவன், இவன், உவன்

### புறச்சுட்டு :

சொற்களுக்கு புறத்தே இச்சூட்டு நிற்குமெனின் அவற்றிற்கு புறச்சுட்டு என பெயர்.

**சான்று:** அப்பையன், இப்பையன், உப்பையன் இவற்றில் சொற்களின் முன் சுட்டு வந்துள்ளது.

இவற்றை (**அ + பையன், இ + பையன், உ + பையன்)** என எளிதாகப் பிரித்து விடலாம்.

சுட்டெழுத்துக்களுள் அ இ என்னும் இரண்டுமே தற்கால வழக்கில் உள்ளன உ என்னும் சுற்றெழுத்து மறைந்துவிட்டது. தற்பொழுது மறந்துவிட்ட போதிலும் சங்க காலத்தில் இது வழக்கில் இருந்துள்ளது. அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களுக்கும் பொருள் உண்டு.

அகரம் சேய்மையில் உள்ள பொருளையும், இகரம் அண்மையில் உள்ள பொருளையும், உகரம் இவ்விரண்டிற்கும் இடையே உள்ள பொருளையும் சுட்டும். ஆனால் உகரம் இப்பொழுது நடைமுறையில் உபயோகத்தில் இல்லை.

**அண்மைச் சுட்டு :** இவ்வீடு, இக்குதிரை, இவன், என்று வருவது அண்மை சுட்டாகும்

**சேய்மை சுட்டு :** அவ்வீடு, அக்குதிரை, அவன், என்று வருவது சேய்மை சுட்டாகும்.

### சுட்டுத் திரிபு

அ, இ என்னும் எழுத்துக்கள் திரிந்து அந்தப் பையன், இந்தப் பெண், என்று வந்தால் அது சுட்டுத் திரிபாகும்.

### வினா எழுத்து

வினாப் பொருளை காட்ட வருகின்ற எழுத்துக்கு வினா எழுத்து என்று பெயர் இவை சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும். எ, யா எழுத்துக்கள் சொல்லின் முதலிலும், ஆ, ஓ என்னும் எழுத்துக்கள் சொல்லின் இறுதியிலும், ஏ என்னும் எழுத்து சொல்லின் முதல், இறுதி ஆகிய இரு வழிகளிலும் நின்று வினாப் பொருளைத் தரும்.

| | |
|---|---|
| எது, எவன், யாது, யாவன் | எ, யா சொல்லின் முதலில் வந்தன. |
| உண்டானா ? படித்தானோ ? அவனா ? அவனோ ? | ஆ, ஓ சொல்லின் ஈற்றில் வந்தன. |
| ஏது, ஏன், ஏவன் | ஏ சொல்லின் முதலில் வந்தது. |
| வந்தானோ, பார்த்தாயோ, சொன்னாயாமே | ஏ சொல்லின் இறுதியில் வந்தது. |

### வினா வகைகள்

### அகவினா

சொற்களின் உள்ளேயே வினா எழுத்து அமைந்து வரும் எனின் அவற்றிற்கு அகவினாய் என பெயர்.

**சான்று:** ஏன், எங்கு, எப்படி, யாவன்.

### புற வினா:

சொற்களின் புறத்தே வினாவெழுத்து அமைந்து வரும் எனின் அவற்றிற்கு புறவினா என பெயர்.

**சான்று:**

ஆய்த எழுத்து ஃ

ஆய்த எழுத்தின் வேறுபெயர்கள்

முப்புள்ளி, முப்பாற்புள்ளி தனிநிலை, அஃகேனம்

| | |
|---|---|
| எப்போது | எ + போது |
| எவ்வூர் | எ + ஊர் |
| வந்தானே | வந்தான் + ஏ |
| உண்டானோ | உண்டான்+ஓ |
| அவனா | அவன் + ஆ |
| யாங்ஙனம் | யா + ஙனம், ஙனம் – இடம் |

### மெய்யெழுத்து

தனித்து இயங்க முடியாதது. பிற உயிர் ஒலிகளின் துணை கொண்டே இயங்கவல்லது. நம்முடைய உடம்பினைப் போன்று தானே இயங்கவும், இயக்கவும், இயலாத காரணத்தினால் இதற்கு மெய்யெழுத்து என்று பெயர். உடம்பெழுத்து என்றும் கூறுவர். உயிர், உடம்பினை செயல்படுத்துவது போன்று, உயிர் எழுத்துக்களே இந்த எழுத்துக்களுடன் சேர்ந்து செயல் புரிய வேண்டும்.

இவை 18 எழுத்துகள் ஆகும். அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பனவாகும். இந்த மெய் எழுத்துக்கள் மூன்று வகைப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாகும்.

**வல்லினம்** ஒலிக்கும் போது சிறிது முயற்சியுடன் வன்மையாக ஒலிக்கப்படுகின்ற காரணத்தினால், இவ்வொலிகளுக்கு வல்லினம் என்று பெயர். ஒலிகளைக் கொண்ட



www.tnpscgroup4.

எழுத்துக்களுக்கு வல்லின எழுத்துக்கள் என்று பெயர்.

அவை: **க், ச், ட், த், ப், ற்** என்பன.

**மெல்லினம்**

ஒலிக்கும் போது அவ்வளவான முயற்சி எதுவும் இல்லாமல் மென்மையாக ஒலிக்கப்படுகின்ற காரணத்தினால் இதற்கு மெல்லினம் என்று பெயர்.

**அவை: ங், ஞ், ண், ந், ம், ன்** என்பன.

**இடையினம்**

வன்மையாக ஒலிக்கப்படுவதற்கும், மென்மையாக ஒலிக்கப்படுவதற்கும், இடைப்பட்டு ஒலிக்கப்படுகின்ற காரணத்தினால் இதற்கு இடையினம் என்று பெயர். அவை: **ய், ர், ல், வ், ழ், ள்** என்பனவாகும்.

**மொழி முதல் எழுத்துக்கள்( 22)**

பொருள் தரும் வண்ணம் எழுத்துக்கள் அமைந்து சொற்கள் பிறந்த போதிலும் அச்சொற்களை எல்லாம் இலக்கண நூலார் ஏற்றுக்கொள்ளுவது இல்லை. சொற்களை அமைக்கும் பொழுது, அச்சொற்களில் முதல் எழுத்துக்கள் இன்னின்ன எழுத்துக்களாக தான் இருக்க வேண்டும் என்னும் விதி தமிழ் இலக்கணத்தில் உண்டு. அவ்வெழுத்துக்களுக்கு, முதல் நிலை எழுத்துக்கள் அல்லது மொழி முதல் எழுத்துக்கள் என்று பெயர்.

அவை: **12 உயிர் எழுத்துக்கள்**

பத்து முதல் நிலை மெய்யெழுத்துக்கள் ; **க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங**

மொழி முதலில் வர கூடாத எழுத்துக்கள்: **ட, ண, ர, ல, ழ, ள, ற, ன, ஃ. ங வரிசையில் ங** என்று எழுத்து மட்டுமே மொழி முதலில் வரும்.

**எடுத்துக்காட்டாக** ; ஙனம் (தற்போது வழக்கில் இல்லை)

ஞ வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துக்கள் மட்டுமே மொழி முதலில் வரும்.

ய வரிசையில் யா, யு, யூ, யோ, யௌ

ஆகிய ஆறு எழுத்துக்கள் மட்டுமே மொழி முதலில் வரும்.

**மொழி இறுதி எழுத்துக்கள் (24)**

இதே போன்று மொழியின் இறுதியிலும் இன்ன எழுத்துக்கள் தான் அமைய வேண்டும் என இலக்கணம் இருக்கின்றது. அந்த எழுத்துக்களுக்கு இறுதிநிலை எழுத்துக்கள் அல்லது மொழி இறுதி எழுத்துக்கள் என்று பெயர்.

உயிர் எழுத்துக்கள் -12

மெய் எழுத்துக்கள் -11 (ஞ், ண், ந், ம் , ய், ர், ல், வ், ழ் , ள், ன்)

குற்றியலுகரம் - 1

மேற்கண்ட 24 எழுத்துக்களும் மொழி இறுதி எழுத்துக்களாகும்.

- (க், ங், ச், ட், த், ப், ற்) எனும் ஏழு எழுத்துக்கள் இறுதியில் வருதல் கூடாது என்பது தெளிவு.
- ஆயுத எழுத்து சொல்லின் இறுதியில் வராது.
- சொல்லின் இறுதியில் உயிர் எழுத்துக்கள் தனித்து வருவது இல்லை
- அளபெடை எழுத்துகளில் இடம்பெறும் போது மட்டும் உயிர் எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வரும்.
- உயிர் மெய் எழுத்துக்களுள் **ங** சொல்லின் இறுதியில் வராது.
- இகர வரிசையில் கெ முதல் னெ முடிய எந்த உயிர்மெய் எழுத்து மொழி இறுதியில் வாரா.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துக்கள் மொழி இறுதியில் வராது.
- சொல் உயிர் எழுத்தில் தொடங்கும், உயிரெழுத்தில் முடியும். மெய் எழுத்தில் தொடங்காது, ஆனால் மெய் எழுத்தில் முடியும். உயிர் மெய்யில் தொடங்கும், ஆனால் உயிர் மெய்யில் முடியாது.

| அசைச் சொற்கள் | | |
|---|---|---|
| **அசைச்** | **பயன்படும் எழுத்து** | **எடுத்துக்காட்டு** |
| கரம் | குறில் எழுத்துகள் | அகரம், இகரம், |
| கான் | நெடில் எழுத்துகள் | ஐகான், ஔகான் |
| காரம் | குறில் நெடில் | மகாரம், ஏகாரம், |
| கேனம் | ஆய்த எழுத்து | அஃகேனம் |

### மொழி இடை எழுத்துக்கள்

- மெய் எழுத்துக்கள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.
- உயிர் மெய் எழுத்துக்கள் சொல்லின் இடையில் வரும்.
- ஆயுத எழுத்து சொல்லின் இடையில் மட்டும் வரும்.
  - அளபெடையில் மட்டும் உயிர் எழுத்துக்கள் சொல்லின் இடையில் வரும்.
  - சொற்களின் இடையிலேயும் இன்ன எழுத்துக்களோடு இன்ன எழுத்துக்கள் தான் வர வேண்டும் என விதி உள்ளது.
  - மெய்கள் பதினெட்டில் க், ச், த், ப் எனும் நான்கும் தம்முடன் தாமே மயங்கும். அதாவது இந்த எழுத்துக்கு அடுத்த எழுத்தும் அதே எழுத்தாகவே இருக்கும், வேறு எழுத்து வராது.

**சான்று:**

- பக்கம் என்ற சொல்லில் க் எனும் எழுத்திற்கு அடுத்து அதே எழுத்து வந்துள்ளது வேறு எழுத்து வந்து சொல் அமையாது பிறவும் இப்படியே.
- ர், ழ் என்னும் இரண்டு மெய்களை அடுத்து அதே மெய்கள் வந்த சொல் அமையாது வேறு மெய் வந்து சொல் உண்டாகும்.
- முற்றம், சுற்றம் போன்று முர்ரம் சுர்ரம் என சொற்கள் உருவாகா. பள்ளம், கள்ளம் போன்று பழ்ழம், கழ்ழம் என அமையா.முதலிலும், இடையிலும், கடையிலும் இன்ன எழுத்துக்கள் தான் வரவேண்டும் எனும் விதிப்படி தமிழில் சொற்கள் அமைகின்றன. வடமொழியிலும், பிற மொழிகளிலும் இத்தகைய அமைப்பு இல்லை.

### இன எழுத்துக்கள்

எழுத்துக்கள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு ஆகியவற்றுள் ஏதேனும் ஒருவகையால் ஒரெழுத்து மற்றொரு எழுத்தை ஒத்தி இருப்பின், அதனை இன எழுத்து என்கிறோம். தமிழ் எழுத்துக்களில் ஆய்த எழுத்துக்கு மட்டும் இணை எழுத்து இல்லை.

**எடுத்துக்காட்டு**

அங்கம் – (ங் – க்)
பஞ்சம் – (ஞ் – ச்)
பண்டம் – (ண் – ட்)
சந்தம் – (ந் – த்)
கம்பம் – (ம் –ப்)
தென்றல் – (ன், ற்)

### உயிர் எழுத்துக்களுள் இன எழுத்துக்கள்

அ - ஆ, இ - ஈ, உ -ஊ, எ-ஏ, ஒ-ஓ, ஐ-இ, ஔ-உ.

### மெய்யெழுத்துக்களுள் இன எழுத்துக்கள்

க்-ங், ச்- ஞ், ட்-ண், த்-ந், ப் - ம், ற்- ன்

### உடனிலை மெய்ம்மயக்கம், வேற்று நிலை மெய்ம்மயக்கம், ஈரொற்று மெய்ம்மயக்கம்

### உடனிலை மெய்ம்மயக்கம்

| | |
|---|---|
| அச்சம் | எச்சம் |
| மொத்தம் | சாத்தான் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| அப்பம் | கப்பம் |

தமிழில் சில எழுத்துக்கள் தன் எழுத்தோடு மட்டும் சேர்ந்து வரும். அவை உடனிலை மெய்மயக்கம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** க், ச், த், ப் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும் எழுத்துகளாகும்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

தமிழில் சில எழுத்துக்கள் தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துக்களுடன் சேர்ந்து வரும். அவை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். ர், ழ் ஆகிய மெய்கள் தன் எழுத்துக்களுடன் சேர்ந்து வாரா.

**எடுத்துக்காட்டு:** தேர்ச்சி, வாழ்க்கை, சர்க்கரை, தொடர்ச்சி, அடர்த்தி, தாழ்ந்தான், தாழ்ப்பாள், வீழ்ச்சி, சேர்த்தான்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

| | | | |
|---|---|---|---|
| ர் | தேர்ச்சி | உயர்வு | தேர்தல் |
| சர்க்கரை | தொடர்ச்சி | அடர்த்தி | சேர்த்தான். |
| ழ் | வாழ்க்கை | தாழ்ந்தான் | தாழ்ப்பாள் |
| வீழ்ச்சி | வாழ்பவன் | சூழ்க | |

**உடனிலை மற்றும் வேற்றுநிலை மெய்ம் மயக்கம்**

தன் எழுத்து, பிற எழுத்து இரண்டுடனும் சேர்ந்து வரும் எழுத்துக்களும் உள்ளன. க், ச்,த், ப், ர், ழ் என்ற ஆறனையும் தவிர்த்து ஏனைய 12 மெய்களும் உடனிலையாகவும் வேற்று நிலையாகவும் மயங்கும்.

ற், ன் ஆகிய எழுத்துக்கள் தன் எழுத்து, பிற எழுத்து இரண்டுடனும் சேர்ந்து வரும்.

எடுத்துக்காட்டு: குற்றம், மேற்கு: அன்னம், அன்பு

| | |
|---|---|
| ட் – பட்டம்,காட்சி | ம் – அம்மா, அம்பு |
| ற் – வெற்றி, பயிற்சி | ன் – மன்னன், இன்பம் |
| ங் – அங்ஙனம், தங்கம் | ய் – செய்யலாம், வாய்மை |
| ஞ் – விஞ்ஞானம், மஞ்சள் | ல் – நல்லவன், செல்வம் |
| ண் – தண்ணீர், நண்பகல் | வ் – இவ்விதம், தெவ்யாது |
| ந் – செந்நெறி, தந்த | ள் – உள்ளம், கொள்கை |

**ஈரொற்று மெய்ம்மயக்கம்**

தனிச் சொற்களிலோ கூட்டு சொற்களிலோ சொற்களின் இடையில், ய், ர், ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் வரும்.

இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர்.

| | | |
|---|---|---|
| ய் –காய்ச்சல், நாய்க்கால் | ர் – உயர்ச்சி, தேர்க்கால் | ழ் – வீழ்ச்சி, காழ்ப்புணர்ச்சி |

**சார்பெழுத்துக்கள்**

முதல் எழுத்துக்களாகிய உயிரெழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் சேருகின்ற காரணத்தினால் உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன. இவை தனித்தே தோன்றும் எழுத்துக்கள் அல்ல. உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் புணரச் செய்வதால் அவற்றைச் சார்ந்து பிறக்கின்றன. இவற்றோடு ஆயுதம், குற்றியலுகரம், குற்றியலுகரம், உயிரளெபடை, ஒற்றளபெடை முதலிய எழுத்துக்களும் முதல் எழுத்துக்களோடு சார்ந்து பிறக்கின்றன. இவ்வெழுத்துக்கள் எல்லாம் முதலெழுத்துக்களோடு சார்ந்து பிறப்பதால் இவற்றிற்கு சார்பெழுத்துக்கள் என்று பெயர நன்னூலார் பத்து சார்பு எழுத்துக்களை கூறுகின்றார். அவை

உயிர்மெய், ஆயுதம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆயுதக்குறுக்கம் எனப் பத்து ஆகும். தொல்காப்பியர் மூன்று என்பார்.

தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துகள் **(3)**

1. குற்றியலிகரம்,
2. குற்றியலுகரம்,
3. ஆய்தம்

நன்னுலார் **பத்துச் சார்பெழுத்துக்களைக்** கூறுகின்றார்.

### உயிர் மெய்

உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் சேருவதால் உருவாகும் 216 உயிர்மெய் எழுத்துக்களும் சார்பெழுத்துக்கள் ஆகும். உயிர்மெய் எழுத்தின் ஒலி வடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும். வரி வடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். முதல் எழுத்துக்களைச் சார்ந்து வருவதால் இவை சார்புஎழுத்துக்கள் வகையுள் அடங்கும்.

### ஆயுதம்

ஆயுத எழுத்தின் வேறு பெயர்கள் முப்புள்ளி, முப்பாற்ப்புள்ளி, தனிநிலை, அஃகேனம்ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும் ஆயுத எழுத்தின் முன்பு குறிலும் பின்பு வல்லின உயிர்மெய் குறில் மட்டுமே வரும். உயிரளபெடை மற்றும் ஒற்றளபெடை இரண்டும் அளபெடை பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

### குற்றியலிகரம்

குறுமை + இயல் இகரம் – குறுகிய ஓசையை உடைய இகரம் குற்றியலிகரம் ஆகும். இது தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும். நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து வரும் மொழியில் யகரமாக அமைந்தால் அது குற்றியலிகரம் எனப்படும்.

### எடுத்துக்காட்டு

- வண்டு + யாது = வண்டியாது
- நாகு + யாது = நாகியாது.
- மியா குறைந்து ஒலிக்கும்.

**எடுத்துக்காட்டு :** கேண்மியா, சென்மியா

### குற்றியலுகரம்

குறுமை + இயல் + உகரம் - குற்றியலுகரம். தனிக்குறிலை அடுத்து வராது. தனி நெடிலை அடுத்தும் இரண்டுக்கு மேற்பட்ட வல்லின எழுத்துக்களின் மீதும் ஊர்ந்து வரும் உகரமாகும். இஃது ஆறு வகைப்படும். இது தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும்.

| | |
|---|---|
| **நெடில்தொடர்க்** | நாடு, காது, ஊறு, காசு |
| **ஆய்தத் தொடர்க்** | எஃது, அஃது, இஃது |
| **உயிர்த் தொடர்க்** | படகு, தராசு, ஒன்பது |
| **வன்தொடர்க்** | மொக்கு, கச்சு, பட்டு |
| **மென்தொடர்க்** | உறங்கு, கொஞ்சு, ஆண்டு, |
| **இடைத்தொடர்க்** | கொய்து, மார்பு, சால்பு, மூழ்கு |

### ஐகாரக் குறுக்கம்

'ஐ' என்னும் எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து ஒன்று (அல்லது) ஒன்றை மாத்திரை அளவில் குறுகி ஒழிப்பது ஐகாரக் குறுக்கமாகும். முதல், இடை, கடை என்ற மூவிடங்களிலும் குறுகும்.

**எடுத்துக்காட்டு :** ஐவர், கலைஞர், மனை.

- **ஐம்பது** – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.
- **தலைவன்** – சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது.
- **கடலை** – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது.

### ஔகாரக் குறுக்கம்

'ஔ' என்னும் எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து ஒன்றரை மாத்திரை அளவில் குறுகி ஒழிப்பது ஔகாரக் குறுக்கமாகும். இது மொழி முதலில் மட்டுமே குறுகும்.

**எடுத்துக்காட்டு :** ஔவை, வௌவால்.

**தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்**

**நையும் ஔவும் முதலற் றாகும். –நன்னூல், 95**

| | |
|---|---|
| **வ்** என்னும் எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரச் சொற்கள் வாரா. | |
| சு, டு, று ஆகியவை இறுதியாக அமையும். இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்கள் இல்லை. | |

**மகரக் குறுக்கம்**

மகர மெய் எழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் இருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிப்பது மகரகுறுக்கம் எனப்படுகிறது.அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய் எழுத்து முழுமையாக ஒலிக்கிறது.

**வலம்** வந்தான் என்ற தொடரில் மகர மெய்யெழுத்தை அடுத்து வகர எழுத்து வருவதால் மகர மெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவில் இருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.

போலும், மருளும் ஆகிய சொற்கள் செய்யுளில் ஓசை சீர்மைக்காக போன்ம், மருண்ம் என்று எழுதப்பட்டன. ன், ண் எழுத்துக்களை அடுத்து மகர மெய் வந்ததால் இவை மகரக் குறுக்கம் ஆகும்.

**ஆயுத குறுக்கம்**

தனி குறிலை அடுத்து வரும் 'ல்', 'ள்' என்னும் மெய்யெழுத்துகள் வருமொழியின் முதலில் தகரம் வருமாயின் ஆய்தமும் பிறவும் தோன்றும். அது தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து கால் மாத்திரையாக குறுகி ஒலிக்கும். இதற்கு ஆயுத குறுக்கம் என பெயராகும். **எ.கா:**

| |
|---|
| கல் + தீது =கஃறீது |
| பல் + துளி = பஃறுளி |
| முள் + தீது =முஃடீது |
| பல் + தொடை = பஃறொடை |
| பல் + தாழிசை = பஃறாழிசை |

**முற்றியலுகரம்**

தனி குறிலை அடுத்து சொல்லின் ஈற்றில் வல்லின மெய்யின் மேல் ஏறி வரும் உகரமும், மெல்லின எழுத்துகளோ, இடையின எழுத்துக்களோ, சொல்லின் ஈற்றில் அமைந்து அவற்றின் மேல் ஏறி வரும் உகரமும் முற்றியலுகரம் எனப்படும். இது தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறையாது ஒலிக்கும்.

**எடுத்துக்காட்டு**

**1**. பகு, பசு, படு, அது, தபு, பெரு = தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரம் பெற்ற முற்றியலுகரங்கள்.

2. காணு, உண்ணு, உருமு = ஈற்றில் உள்ள மெல்லின உகரங்கள், முற்றியலுகரங்கள் ஆகும்.

3. எழு, தள்ளு, கதவு = ஈற்றிலுள்ற உள்ள இடையின உகரங்கள், முற்றியலுகரங்களாகும்.

**போலி**

'போல இருத்தல்' என்பது இதன் பொருளாகும். ஓர் எழுத்து இருக்க வேண்டிய இடத்தில் வேறொரு எழுத்து நின்று பொருள் மாறாமல் அமையும் சொல்லாகும்.

இவ்வெழுத்து போலி முதற் போலி, இடைப்போலி, கடைப்போலி என மூன்று வகைப்படும்.

**முதற் போலி**

சொல்லின் முதலில் இருக்க வேண்டி எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து

அமைந்து அதே பொருள் தரின் அது முதற்போலியாகும்.

**ச, ஞ, ய** என்னும் எழுத்துகளுக்கு முன் வரும் அகரத்திற்கு பதிலாக ஐகாரம் அமையும்.

**சான்று :**

| | |
|---|---|
| மஞ்சு | மைஞ்சு |
| மயல் | மையல் |
| மயன் | மையன் |
| நயம் | ஞயம் |
| பசல் | பைசல் |

## இடைப்போலி

சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தரும் அஃது இடைப்போலி ஆகும்.

சொற்களுக்கு இடையில் ஐகாரம் அமையும். நகர மெய்க்கு பதில் ஞகர மெய் அமையும்.

**சான்று:**

| | |
|---|---|
| அரசியல் | அரைசியல் |
| அரயர் | அரையர் |
| அமச்சு | அமைச்சு |
| ஐந்நூறு | ஐஞ்ஞூறு |
| இலஞ்சி | இலைஞ்சி |

## கடைப் போலி( இறுதிபோலி)

சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தரும் அது கடைப்போலி ஆகும்.

மகர மெய்க்கு பதிலாக னகர மெய் அமையும்.
லகர மேய்க்கு பதிலாக ரகர மெய் அமையும்.

**சான்று:**

| | |
|---|---|
| பந்தல் | பந்தர் |
| குடல் | குடர் |
| நிலம் | நிலன் |
| சாம்பல் | சாம்பர் |

## இரண்டு, மூன்று போலிகள் அமைந்த சொற்கள்

| | |
|---|---|
| நைந்து – நைஞ்சு | இடை, கடைப்போலிகள் |
| ஐந்து – அஞ்சு | அஞ்சு,<br>இடை, கடைப்போலிகள் |

## முற்றுப்போலி

முதல், இடை, கடை என அனைத்து எழுத்துக்களும் மாறி இருந்து, பொருள் மாறவில்லை எனில், அது 'முற்றுப்போலி' எனப்படும்.

## சந்தியக்கரம்

போலி எழுத்து என்பதை 'எழுத்துப் போலி' எனவும் குறிப்பிடுவர். தொல்காப்பியத்திலும் போலி பற்றிய குறிப்புகள் உள்ளன. இதனை வடமொழியில் 'சந்தியக்கரம்' என்பர். சந்தியக்கரன் என்றால் கூட்டெழுத்துக்களால் உருவாகும் எழுத்து என்று பெயராகும்.

ஐ, ஔ என்ற எழுத்துக்கள் சந்தியக்கரமாகும்.

**எடுத்துக்காட்டு:**

ஐயா-அய்யா, ஐயர்-அய்யர், ஔவை- அவ்வை.

## இடுகுறிப்பெயர்

ஒரு காரணமும் இல்லாமல் தொன்று தொட்டு ஆன்றோரால் வழங்கி வரும் பெயருக்கு இடுகுறிப்பெயர் எனப்படும்.

**சான்று:**

கல், கலம், கன்னல்

ஒரு காரணமும் இல்லாமல் வந்த பெயர்கள். ஆன்றோர் வழங்கிய இடுகுறிப் பெயர்களே தொன்று தொட்டு வழங்கி வரும். இவற்றிற்கு மேல் புதிதாக எதுவும் தோன்றாது.

## இடுகுறி பொதுப்பெயர்:

அனைத்திற்கும் பொதுவாக அமையும் இடுகுறி பெயர்கள் 'இடுகுறி பொதுப்பெயர்' எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

மலை, காடு, மாடு, பழம்

## இடுகுறி சிறப்பு பெயர்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எந்த ஒரு காரணம் இன்றி வழங்கும் இடுகுறிப் பெயரின் பின்னே இடுகுறி பொதுப்பெயர் அமைந்து வந்தால் அஃது இடுகுறி சிறப்பு பெயராகும். **எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| **தென்னை மரம்** | தென்னை (இடுகுறி சிறப்பு பெயர்) |
| **மரம்** | இடுகுறி பொதுப்பெயர் |
| **வாழைப்பழம்** | வாழை (இடுகுறி சிறப்பு பெயர்) |
| **பழம்** | (இடுகுறிப் பொதுப்பெயர்) |

**காரணப்பெயர்**

ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது பல காரணங்கள் பற்றியோ வழங்கி வரும் பெயர் காரணப்பெயர் எனப்படும். **சான்று :**

| **பெயர்** | காரணம் |
|---|---|
| **முக்காலி** | மூன்று கால்கள் |
| **பறவை** | பறத்தல் |
| **பரவை** | பரந்து இருத்தல் |

**காரண சிறப்பு பெயர்**

வலையில் என்பது காரண சிறப்பு பெயராகும். வலையில் போலவே சில பொருள்கள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும் அவை வலை என அழைக்கப்படுவது இல்லை. இச்சொல் கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதால் காரண சிறப்பு பெயர் ஆயிற்று.

**எடுத்துக்காட்டு:**

மோதிரம், கபிலர்

**காரணப் பொதுப் பெயர்:**

பறப்பதனால் 'பறவை' என காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் பறவை என்னும் பொது சொல்லால் அழைக்கின்றோம். இதனை காரணப் பொதுப்பெயர் என்கிறோம்.

**எடுத்துக்காட்டு:**

அணிகலன், புலவன்

**வேற்றுமை உருபேற்கும் போது திரியும் பெயர்கள்**

**தன்மை பெயர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | யான் + ஐ = என்னை<br>யான் + ஆல் = என்னால் | யான் + கு = எனக்கு<br>யான் + இன் = என்னின் |
| | யான் + அது = எனது<br>யான் + கண் = என்கண் | – |
| 2. | யாம் + ஐ = எம்மை<br>யாம் + ஆல் = எம்மால் | யாம் + கு = எமக்கு<br>யாம் + இன் = எம்மின் |
| | யாம் + அது = எமது<br>யாம் + கண் = எங்கண் | – |
| 3. | நாம் + ஐ = நம்மை<br>நாம் + ஆல் = நம்மால் | நாம் + கு = நமக்கு<br>நாம் + இன் = நம்மின் |
| | நாம் + அது = நமது<br>யாம் + கண் = நங்கண் | – |
| 4. | யாங்கள், நாங்கள் என்னும் தன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் போது எங்கள் எனத் திரியும். | |
| | எங்கள் + ஐ = எங்களை<br>எங்கள் + ஆல் = எங்களால் | எங்கள் + கு = எங்களுக்கு<br>எங்கள் + இன் = எங்களின் |
| | எங்கள் + அது = எங்களது | – |
| 5. | தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் தம் எனத் திரிந்து வேற்றுமை உருபை ஏற்கும். தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தங்கண் | |
| 6. | தாங்கள் என்னும் படர்க்கை பெயர் உருப்பேற்கும் போது தங்கள் என திரியும். தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது,தங்கண். | |

**முன்னிலைப் பெயர்கள்**

1. **'நீ'** என்னும் முன்னிலை ஒருமை பெயர் வேற்றுமை உருபேற்கும் போது **'நின்'** எனவும் **'உன்'** எனவும் மாறும்.

| | |
|---|---|
| நீ + ஐ | நின்னை, உன்னை |
| நீ + ஆல் | நின்னால், உன்னால் |
| நீ + கு | நினக்கு, உனக்கு |
| நீ + இன் | நின்னின், உன்னின் |

www.tnpscgroup4.in

| | |
|---|---|
| நீ + அது | நினது, உனது |
| நீ + கண் | நின்கண், உன்கண் |

| | |
|---|---|
| நீ | முன்னிலை ஒருமை |
| நீர் | முன்னிலை பன்மை |
| நீவிர் | |
| நீங்கள் | |

2. நீர் என்னும் முன்னிலை பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நும் எனவும் உன் எனவும் தெரியும்.
   - நும்மை, நும்மால், நுமக்கு, நும்மின், நுமது, நும்கண்
   - உம்மை, உம்மால், உமக்கு, உம்மின், உமது, உம்கண்
3. நீங்கள் என்னும் முன்னிலை பன்மை பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நுங்கள், உங்கள் என மாறும்.

- நுங்களை, நுங்களால், நுங்களுக்கு, நுங்களின், நுங்களது.
- உங்களது, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது.

**படர்க்கைப் பெயர்கள்:**
தான் என்னும் படர்க்கை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபேற்கும் போது தன் என மாறும்.

| | | |
|---|---|---|
| தான் + ஐ = தன்னை | தான் + கு = தனக்கு | தான் + அது = தனக்கு |
| தான் + ஆல் = தன்னால் | தான் + இன் = தன்னின் | தான் + கண் = தன்கண் |

**மாத்திரை**

எழுத்துக்களின் ஒலி அளவு குறித்ததே மாத்திரை. மாத்திரை என்ற ஒலி அளவு யாதெனின் கண் இமைக்கும் நேரம் அல்லது கைநொடி நேரம் என்பர் இலக்கண நூலார்.

| எழுத்துகள் | மாத்திரை அளவு |
|---|---|
| குறில் | 1 |
| நெடில் | 2 |
| மெய் எழுத்துகள் | 1/2 |
| மகரக் குறுக்கம், ஆய்தக் | 1/4 |
| குற்றியலிகரம், குற்றியலுகரம் | 1/2 |
| ஆய்த எழுத்துகள் | 1/2 |
| ஐகாரக் குறுக்கம், ஔகாரக் | 1 |
| உயிரளபெடை | 3 |
| ஒற்றளபெடை | 1 |

எழுத்துக்களின் மாத்திரை இரண்டிற்கு மேல் இல்லை என்பது இலக்கண நூலார் கருத்து;அதற்கு மேலும் மாத்திரை பெற வேண்டும் எனில் அது அளப்பெடையாகச் செய்யுளில் வரும்; அல்லது இசையில் வரும்.

| | |
|---|---|
| தமிழில் மொத்த எழுத்துகள் | 247 |
| உயிர்க் குறில் எழுத்துகள் | 5 |
| உயிர் நெடில் எழுத்துகள் | 7 |
| வல்லின மெய்கள் | 6 |
| இடையின மெய்கள் | 6 |
| மெல்லின மெய்கள் | 6 |
| உயிர்மெய்க் குறில் | 90 |
| உயிர்மெய் நெடில் | 126 |
| ஆய்தம் | 1 |
| மொத்தம் | 247 |

**மயங்கொலிகள்**

உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.

**மயங்கொலி எழுத்துக்கள்:** ண, ன, ந: ல, ழ,ள: ர, ற

**ண, ன, ந:**

**ண** நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

**ன** நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன்பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

**ந** நாவின் நுனி மேல் வாய் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கிறது.

**(ட் – ண்), (த் –ந்), (ற்– ன்) ஆகியவை இன எழுத்துக்கள். இந்த இன எழுத்துக்களைக் கொண்டு :**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- டகரத்தை அடுத்து வரும் ண டண்ணகரம் என்றும், தகரத்தை அடுத்து வரும் ந தந்நகரம் என்றும்,
- றகரத்தை அடுத்து வரும் ன றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

**ல, ள, ழ:**

**ல:**

நாவின் இரு பக்கங்கள் தடித்து மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும் இதனை தனி லகரம் என்கிறோம்.

**ள:**

நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனை பொது ளகரம் என்கிறோம்.

**ழ :**

நாவின் நுனி மேல்நோக்கி வளை வருடுவதால் ழகரம் தோன்றும். ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனை சிறப்பு ழகரம் என்கிறோம்.

**ர, ற :**

- **ர** - மேல் அண்ணத்தின் முதல் பகுதியைத் தொட்டு வருடுவதால் ரகரம் தோன்றுகிறது. இதனை இடையின ரகரம் என்கிறோம்.
- **ற** -மேலனத்தில் மையப் பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இதனை வல்லின றகரம் என்கிறோம்.

**அளபெடை**

அ, இ, உ போன்ற உயிரெழுத்துக்கள் வார்த்தைகளின் நடுவிலும் கடைசியிலும் வருவதில்லை. அவ்வாறு வந்தால் அவையே அளபெடை எனப்படும். அளவு + எடை = அளபெடை. அளவைக் காட்டிலும் மிக்க ஒலித்தல்.

அளபெடை

↓ உயிர் அளபெடை | ↓ ஒற்றளபெடை

1. செய்யுளிசை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. சொல்லிசை அளபெடை

**உயிரளபெடை**

செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துக்கள் ஏழும் அளபெடுக்கும். இஃது உயிரளபெடை எனப்படும். அவற்றிற்கு இனமான குறில் எழுத்துக்கள் அதன் பக்கத்தில் வரும்.

ஐ என்ற எழுத்திற்கு இ என்ற எழுத்தும் ஔ என்ற எழுத்திற்கு உ என்ற எழுத்தும் இனமாக வரும்.

**எடுத்துக்காட்டாக,**

படாஅமை, விடாஅது, உலா அர், படா அர்.

**எடுத்துக்காட்டு ;**

ஓஒதல் வேண்டும் – முதல்

கெடுப்பதும் உம் கெட்டார்க்க – இடை

நல்லபடா அ பறை – கடை

மொழி முதல், இடை,கடை ஆகிய மூன்று இடங்களிலும் உயிர் நெடில் அளபெடுக்கும்.

**1. <u>செய்யுளிசை அளபெடை (அல்லது) இசை நிறை அளபெடை</u>**

செய்யுளில் இசையை நிறைவிக்க வரும் அளபெடை செய்யுளிசை அளபெடை ஆகும்.செய்யுளில் ஓசை குறையும் இடத்தில், அந்த ஓசையை நிறைவு செய்ய சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நின்ற

www.tnpscgroup4.in

உயிர்நெடில் எழுத்துக்கள் ஏழும், தமக்கு இனமாகிய குறில் எழுத்துக்களை பெற்று, உரிய மாத்திரை அளவில் இருந்து மிக்கு ஒலிக்கும்.

**எடுத்துக்காட்டாக:**

**கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடா அர் விழையும் உலகு.**

1. இவ்வளபெடை வந்துள்ள சீரை பிரித்தால் ஈரசை சீர்களாக இருக்கும்.
2. **'இ'** என்னும் எழுத்தில் முடியாது.

### 1. <u>இன்னிசை அளபெடை:</u>

ஓசை குறையாத இடத்தில் இனிய ஓசையை தருவதற்காக குறில், நெடிலாக மாறி அளவெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

- இவ்வளபெடை மூன்று அசைகளை கொண்ட காய்ச்சீயராக இருக்கும்.
- இ' என்னும் எழுத்தில் முடியாது.
- பெரும்பாலும் உ என்னும் எழுத்தில் முடிந்திருக்கும்.

| |
|---|
| கெடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே<br>எடுப்பதும் எல்லாம் மழை. |

**எடுத்துக்காட்டாக;** உடுப்பதும், உண்பதும்

### 2. <u>சொல்லிசை அளபெடை</u>

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சம் பொருளைத் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

**தழீஇ** – **'தழீ'** என்னும் தொழிற்பெயர்ச்சொல் '**தழீஇ**' (தழுவி) என வினையெச்ச சொல்லாக அளபடுத்ததால் இது சொல்லிசை அளபெடை ஆயிற்று.

| |
|---|
| உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்<br>வரனசைஇ இன்னும் உளேன். |

இவ்வளபெடை **'இ'** என்னும் எழுத்தில் முடிந்திருக்கும்

**எடுத்துக்காட்டாக:**

- உரனசைஇ
- வரனசைஇ
- நசைஇ
- நிறீஇ

**ஒற்றளபெடை:**

செயலில் ஓசை குறையும் இடத்தில் ஒற்றெழுத்துக்கள் மிக்க ஒழிப்பதே ஒற்றைப்படையாகும் ஒற்றளப்படையில் மிக்க ஒலிக்கும் எழுத்துக்கள் மொத்தம் **11.**

| |
|---|
| எஃஃ ஃகிலங்கிய கையராய் இன்னுயிர்<br>வெஃஃ ஃகுவார்க்கில்லை வீடு. |

அவையாவன; ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், மற்றும் ஃ **(எ.கா)**

"மடங்ங் கலந்த மனனே
விடங்ங் கலந்தானை வேண்டு".

"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிகணங்கு போழ்வா யிலவம்பூ".

**எழுத்துக்களின் பிறப்பு**

எழுத்துக்களின் பிறப்பு

- இடப்பிறப்பு
  - மார்பு
  - கழுத்து
  - தலை
  - மூக்கு
- முயற்சி பிறப்பு
  - இதழ்
  - நா
  - பல்
  - அண்ணம்

www.tnpscgroup4.in

ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை ஒலிப்புமுறைகள் எனவும் கூறுவர்.

**முதல் எழுத்துக்களின் இட பிறப்பு**

- 12 உயிர் எழுத்துக்களும், இடையின எழுத்துக்கள் ஆறும், கழுத்திலிருந்து பிறக்கின்றன.
- எழுத்துக்கள் ஆறு, மூக்கில் இருந்து பிறக்கின்றன.
- வல்லின எழுத்துக்கள் ஆறும், மார்பிலிருந்து பிறக்கின்றன.

**ஆவி இடைமை இடமிடறு ஆகும்**
**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை.**
**நன்னூல்,75**

(ஆவி– உயிரெழுத்து; இடைமை– இடையினம்; மிடறு – கழுத்து; மென்மை– மெல்லினம்; உரம்– மார்பு.)

**முதல் எழுத்துக்களின் முயற்சி பிறப்பு**

**உயிர் 12**

- அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒழிப்பதனால் பிறக்கின்றன அவற்றுள்,

**முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய - (அங்காப்பு வாயை திறத்தல்) நன்னூல்,76**

- இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்துக்களும் வாயை திறப்பதனோடு மேல் வாய் பல்லை நாவிளிம்பு தொடுவதனால் தோன்றுகின்றன.

**இஈ எஏ ஐ அங் காப்போ(டு)**

**அண்பல் முதல்நா விளிம்புற வருமே – (நன்னூல்,77)**

> **சொல்லின் பண்புகள்;**
>
> - இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.
> - மூவகை இடங்களிலும் வரும்.
> - உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
> - வெளிப்படையாகவும், குறிப்பாகவும் வரும்.

- உ, ஊ, ஔ, ஆகிய ஐந்து எழுத்து உதடுகளை குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.

**உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே. – (நன்னூல்,78)**

**மெய் 18**

- க், ங், - இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தை தொடுவதனால் தோன்றுகின்றன.
- ச், ஞ் – இங்கு இவ்விரு மெய்களும் இடை நா (நடு, நா), நடு அண்ணத்தை தொடுவதனால் தோன்றுகின்றன.
- ட், ண் – இவை நாவினது நுனி அண்ணத்தின், நுனியை தொடுவதனால் தோன்றுகின்றன.

**கஙவும் சஞவும் டணவும் முதலிடை**
**நுனிநா அண்ணம் உறமுறை வருமே – (நன்னூல்,79)**

- த், ந் – மேல்வாய் பல்லின் அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துக்கள் தோன்றுகின்றன.

**அண்பல் அடிநா முடியுறத் தந வரும்.– (நன்னூல்,80)**

- ப், ம் மேல் உதடும், கீழ் உதடும், பொருந்த இவை தோன்றும்.

**மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும் – (நன்னூல், 81)**

- ய் – இது நாக்கின் அடிப்பகுதி மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகின்றது.

**அடிநா அடியண்ணம் உறயத் தோன்றும். – (நன்னூல், 82)**

- ர், ழ் இவை மேல் வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.

**அண்ணம் நுனிநா வருட ரழவரும். – (நன்னூல், 83)**

- ல் – இது மேல் வாய் பல்லின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதானால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கின்றது.

**அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**

**நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**

**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும். – (நன்னூல், 84)**

- வ் – இது மேல்வாய்ப் பல்லை கீழுதடு பொருந்துவதனால் பிறக்கிறது.

**மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே – நன்னூல், 85**

- ற்,ன் – இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

**அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும். – நன்னூல், 86**

**<u>சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு , முயற்சி பிறப்பு :</u>**

- ஆய்தமாகிய சார்பெழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சி பிறப்பு வாயை திறந்து ஒலித்தலே ஆகும்.
- பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாக கொண்டு ஒலிக்கின்றன.

| சொல் | முதலில் ஆளப்பட்ட இலக்கியம் | மேற்க்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் (வஞ்சிக்காண்டம்) | இமிழ் கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இது நீ கருதினை ஆயின் |
| தமிழன் | அப்பர் தேவாரம் | தமிழன் கண்டாய் |